Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.497/2020

**Depositions of PW- 3**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு. தேனப்பன் | Occupation | |
| Father's name | முத்தையா | Calling | |
| Village | சிவகாசி | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 24th day of June 2025.

24.06.2025

எதிரி ஆஜர் இல்லை . மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது சிவகாசியில் உள்ள அருண் நகரில் குடியிருந்து வருகிறேன். நான் சிவகாசியிலுள்ள அண்ணாமலையார் அடகு கடையில் வேலை செய்து வருகிறேன். கடந்த 26.11.2019 ம் தேதியன்று மணிமாலா என்பவர் எங்கள் கடைக்கு வந்து நகைகளை அடகு வைத்தார். பின்பு போலீசார் வந்து மணிமாலா அடகு வைத்த நகைகள் திருட்டு நகைகள் என்று கூறி எங்களிடம் இருந்து வாங்கிக்கொண்டு சென்றார்கள். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரித்தரப்பில் குறுக்கு விசாரணை–**

போலீசார் எங்களிடமிருந்து வாங்கிச் சென்ற நகைகள் எந்தெந்த நகைகள் என்பது பற்றி தற்போது எனக்கு நியாபகமில்லை. சுமார் 2 கிராம் நகைகளை எங்களிடமிருந்து வாங்கிக்கொண்டு சென்றனர். மணிமாலாவை எனக்கு தெரியும். அடகு வைக்கும்போது நகைகளையும், அடகு வைத்த நபரையும் போட்டோ எடுத்தோமா என்றால் எடுத்தோம். மேற்படி சம்பவத்தன்று மணிமாலா தனது ஆதார் அட்டையை

கொடுத்துதான் நகைகளை அடகு வைத்தார். 26.11.2019 அன்று சுமார் 6000 ரூபாய்க்கு அடகு வைத்தார். மணிமாலாவின் போட்டோ, ஆதார் அட்டை மற்றும் அடகு வைத்த ரசீதை போலீசாரிடம் கொடுத்தோம். எங்கள் அடகு கடைக்கு லைசன்ஸ் உள்ளது. ஒருவர் எங்கள் கடையில் நகைகளை அடகு வைத்தால் நாங்கள் கடையிலுள்ள பதிவேட்டில் எழுதுவோம் என்றால் சரிதான். அந்த பதிவேட்டை போலீசாரிடம் கொடுக்கவில்லை. எங்களிடம் மணிமாலா நகைகளை அடகு வைக்கவில்லை என்றாலும் அவ்வாறு அடகு வைத்திருந்தால் அடகு வைக்கும்போது எடுக்கப்படும் புகைப்படம் மற்றும் அடகு ரசீது போன்ற ஆவணங்களை போலீசாரிடம் கொடுத்திருப்போம் என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.